

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், உதகை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் அரசின் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து, துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று (13.02.2025) நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.என்.எஸ்.நிஷா , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வனக்கோட்டம்) கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை தாலுகா வேடியங்காடு புதூர் பிரிவு மின்வாரிய அலுவலகத்தில் 24.01.2025 அன்று காலை ஏற்பட்ட பழுதினை நீக்க, அப்பகுதியில் பணிபுரிந்து வந்த ஒப்பந்த பணியாளர் பெரிய ராமாபுரத்தைச் சேர்ந்த ரகுபதி (வயது 25) என்பவர் மின் கம்பத்தில் ஏறி பழுது பார்த்த போது மின்சாரம் தாக்கி பலியானார். இவரது குடும்பத்தார் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியிடம் 11.02.2025 அன்று நிவாரணம் கோரி மனு அளித்ததை தொடர்ந்து, மின்சாரத்துறை அமைச்சரை தொடர்பு கொண்டு நிவாரணம் வழங்க கோரியதற்கிணங்க, 12.02.2025 அன்று இறந்தவரின் குடும்பத்தாருக்கு அரசு சார்பில் நிவாரணம் ரூ.10,00,000/– வழங்கப்பட்டது. மேலும் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.1,00,000/– ரொக்க பணம் இராணிப்பேட்டை விசுவாஸ் பள்ளி தலைவர் திருமதி. கமலாகாந்தி வழங்கினார். உடன், திருவள்ளூர் மாவட்டம் (மின்சாரத்துறை) மேற்பார்வை பொறியாளர் சேகர், திருத்தணி செயற்பொறியாளர் பாஸ்கர், ஆர்.கே.பேட்டை உதவி செயற்பொறியாளர் செந்தில் மற்றும் மணி, பழனி ஸ்ரீதர், கௌஷிக் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

# இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 30 இணைகளுக்கு திருமணம்!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, பிப். 14 -

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுடைய ஆலோசனை பேரில் திராவிட மாடல் ஆட்சியில் இந்து சமய அறநிலைத்துறை சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (14.2.2025 - வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணியளவில் இராஜா அண்ணாமலைபுரம், கிரின்வேஸ் ரோடு கபாலீஸ்வரர் கோயில் திருமண மண்டபத்தில் 30 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

இநிநிகழ்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்பி .என்.ஸ்ரீதர் நன்றி கூறுகிறார்.

எனவே மாவட்ட, பகுதி, வட்ட, செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்,கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பெலவர்த்தி ஊராட்சி, வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாமில், பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ரூ.19 கோடி மதிப்பில் உத்திரமேரூர் தொகுதியில் உயர்மட்டப் பாலம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், பிப். 14 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் நெய்யாடுபாக்கம் கிராமத்தில் செய்யாறு உள்ளது. இந்த கிராமத்தில் இருந்தும் இதன் அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் ஏராளமான பொதுமக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் இளைஞர்களும் ஆற்றைக் கடந்து இளையனார் வேலூர் கிராமத்தின் வழியாக வாலாஜாபாத், ஒரகடம் சிப்காட் தொழிற்பேட்டை க்கும், பள்ளிக் கல்லூரிகளுக்கும் செய்யாற்றில் தற்காலிக மண்பாதை அமைத்து இருசக்கர வாகனத்தில் சென்று வந்தனர்.

மழைக்காலங்களில் தற்காலிக மண் பாதை அடித்து சென்றுவிடும் இந்த வழியாக செல்ல முடியாமல் சுமார் 20 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. இதனால் இந்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மழைக்காலங்களில் ஆற்றைக் கடந்து செல்ல முடியாமல் கடுமையாக அவதிப்பட்டனர்.

இந்நிலையில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினரும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளருமான க. சுந்தர் எம்எல்ஏவிடம் உயர் மட்ட பாலம் கட்டித் தர வேண்டுமென கோரிக்கை மனு அளித்திருந்தனர். இந்த மனுவினை நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஏ.வா.வேலுவிற்கு பாலம் கட்டித் தர அப்பகுதி மக்கள் சார்பில் க. சுந்தர் எம் எல் ஏ கோரிக்கை வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில் 19 கோடி மதிப்பில் நெய்யாடுபபாக்கம் இளையனார் வேலூர் இடையே செய்யாற்றில் 300 மீட்டர் நீளத்தில் உயர் மட்ட பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் கட்டுமான பணி தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று காலை நெய்யோடுப்பாக்கம் செய்யாற்றங்கரையில் நடைபெற்றது. திமுக ஒன்றிய செயலாளர் டி.குமார் முன்னிலை விகித்தார். நெடுஞ்சாலைத்துறை உதவி செயற்பொறியாளர் விஜய் அனைவரையும் வரவேற்றார்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ கலந்து கொண்டு பாலம் கட்டும் பணியை தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் பேசுகையில் திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதியில் வரலாற்று சிறப்புமிக்க பாலத்தை கட்டுவதற்கு உத்தரவிட்டு அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது 15 மாதங்களில் இந்த பாலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரவுள்ளது இந்தப் பாலம் கட்டி முடித்தால் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்களும் இளைஞர்களும் ஒரகடம் சிப்காட்டிற்கு போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையாகவும், குறைந்த தூரத்தை கொண்ட சாலையாகவும் அமையும் இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியுடன் சென்று வருவர் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் சிவராமன், கவுன்சிலர் அன்புராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன்மொழி சுபாஷ், கமலக்கண்ணன் உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வரும் க.அண்ணாதுரை எம்.எல்.ஏ., அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. பழனிவேல் (38ஏ, தாமரைக் குடிகாடு, ஆலடிக்குமுலை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.) அவர்கள் தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வரும் பா.மு.முபாரக் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.கே.எம்.ராஜு (நெடுகுளா அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்) அவர்கள் நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்

**பிப்ரவரி 14 (1985)**



**சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.**

**"ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருச்சி மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த காஜாமலை விஜய், தி.முத்துசெல்வம், எஸ்.துரைராஜ், பெ.ராமதாஸ் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்

**பிப்ரவரி 14 (2006)**



**வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.**

**தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**"அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**